


## பிள்ளைகள் மற்றும் இளையோருக்கான அவசர சேவை நடுநிலையம் (NZKJ)

### வைத்திய நிலைய அதிபர்

குழந்தைகள் மற்றும் இளையோருக்கான அவசர சேவை நடுநிலையம் NZKJ என்பது பிள்ளைகளுக்கான வைத்திய நிலையத்திற்குள் உள்நுழைவதற்கான வழியாகும்.

அவசரதேவை ஏற்படுவது முழுக் குடும்பத்திற்கும் எதிர்பாராத ஒரு நிகழ்வு. வைத்திய நிலைய அதிபருக்கும் அவரது குழுவினருக்கும் நோயாளார்களின் அவசர நிலையை மிகவும் கவனத்தில் எடுப்பதும், அதற்கு தகுந்தவாறு சிகிச்சை வழங்குவதும் ஒரு முக்கிய விடயமாகும்.

**********************************************************************************************************************

### தொடர்புகொள்ளுதல்

உங்கள் பிள்ளைக்கு நோய் ஏற்பட்டுள்ளது ஆனால் உங்கள் பிள்ளைகளுக்கான வைத்தியர் அல்லது குடும்ப வைத்தியரைத் தொடர்பு கொள்ள முடியவில்லையா? அவசர தேவைகளின் போது Kispi தொலைபேசி ஊடாக பிள்ளைகளுக்கான வைத்திய ஆலோசனை நிலையத்தை நாள் முழுவதும் எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ள முடியும்.

தொலைபேசி **/** தொலைநகல்

- பிள்ளைகளுக்கான வைத்திய ஆலோசனை நிலையம்: Kispi தொலைபேசி (கட்டணம் செலுத்துவது: பிராங் 0.95**/** நிமிடத்திற்கு) +41 (0) 900632 92 7
- 24 மணி- நேர அவசர சேவை: (தொலைபேசி மூலமான ஆலோசனை வழங்கப்படாது) +41 (0) 31 632 92 77
- அவசரசிகிச்சை பொறுப்பேற்றலுக்கான தொலைநகல் +41 (0) 31 632 52 99

தபால் முகவரி
Notfallzentrum für Kinder und Jugendliche NZKJ
Inselspital
3010 Bern

பாராட்டுக்கள் மற்றும் விமர்சனங்களை மின்னஞ்சல் மூலமாக பெற்றுக்கொள்வதை நாம் விரும்புகின்றோம். இது நோயாளர்களைப் பதியும் விடயம் அல்ல!

**********************************************************************************************************************

### அனுப்பி வைத்தல்

தொடர்புக்கான தொலைபேசி

- பொறுப்பேற்றல் மற்றும் சிகிச்சைப் பிரிவை முடிவுசெய்தல் NZKJ (24 மணி- நேர பதிவு செய்தல் **/** பொறுப்பேற்றல்) +41 (0) 31 632 92 77
- இப் பகுதியின் செயலாளர் +41 (0) 31 632 54 68
- அவசரசிகிச்சை பொறுப்பேற்றலுக்கான தொலைநகல் +41 (0) 31 632 52 99

- Inselspital வரவேற்பு மையம் +41 (0) 31 632 21 11
- பாராட்டு மற்றும் குறைகள்: மின்னஞ்சல்:

**பிள்ளைகள் மற்றும் இளையோருக்கான அவசர சேவை நடுநிலையத்திற்கு (NZKJ), வெளியில் இருந்து நோயாளர்களை அனுப்பி வைத்தல்**

*அவசர வேளைகளின்போது*
தயவுசெய்து கடமையிலுள்ள NZKJ வைத்தியரிடம் பதிவுசெய்யவும் (24 மணிவரை, பதிவு செய்தல் **/** பொறுப்பேற்றல்) NZKJ 031 632 92 77, உள்ளாகத் தேடுவதற்கு 8111) அத்துடன் தேவைப்படின் அவசர பொறுப்பேற்றல் பகுதிக்கு தொலைநகல் அனுப்பவும்.

*அவசர வேளை இல்லாதபோது* (சத்திரசிகிச்சை தேவைப்படாத வருகை அல்லது Poliklinik ல் இருந்து அனுப்பப்படல் போன்றவை)
அனுப்பி வைப்பவர்கள் முன்னராகவே பிள்ளைகளுக்கான நோய்கள் அல்லது பிள்ளைகள் முறிவு நெறிவு நிபுணர்களை Inselspital வரவேற்பு மையம் ஊடாகத் தொடர்பு கொண்டு கதைத்துக் கொண்ட பின்பாக.
விளக்கமில்லாத வேளைகளில் தயவுசெய்து கடமையிலுள்ள NZKJ வைத்திய மேல் அதிகாரியுடன் (7:30 தொடக்கம் 24:00 மணி வரை, NZKJ பொறுப்பேற்கும் பகுதி ஊடாக 031 632 92 77), உள்ளாகத் தேடுவதற்கு 8110) கதைத்துக் கொள்ளவும்.

தயவுசெய்து கடமையிலுள்ள NZKJ ல் பதிவு செய்யவும் (24 மணி- நேரம், Inselspital வரவேற்பு மையம் ஊடாக, உள்ளாகத் தேடுவதற்கு 8111) அத்துடன் தேவைப்படின் அவசர பொறுப்பேற்றல் பகுதிக்கு தொலைநகல் அனுப்பவும்.

**************************************************************************************************************

Inselspital ன் குழந்தைகள் மற்றும் இளையோருக்கான அவசர தேவைகளின் நடுநிலையம் ஒவ்வொரு நாளும் 24 மணித்தியாலங்கள் வருடத்தில் 365 நாட்களும் 16 வயதுக்கு உட்பட்ட நோயாளார்களுக்காக (16வது பிறந்த நாள் வரை) திறந்திருக்கும்.
NZKJ ஒரு வருடத்தில் ஏறத்தாழ 20.000 நோயாளர்களைப் பராமரிக்கின்றது.
எமது நிபுணத்துவம் வாய்ந்த குழுவினர் தன்நம்பிக்கையோடு நோயாளர்களின் கடினமான மற்றும் சாதாரண நோய்கள் அல்லது காயங்களுக்குச் சிகிச்சை வழங்குவார்கள்.
ஒரு தகுந்த சிகிச்சையளிப்பதில், நோயாளர்களின் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது, எமக்கு மிகவும் பெரிய விடயமாகவுள்ளது. உங்களது மீள் தொடர்புகள் எமக்கு முக்கியம் என்பதுடன் அவை எமக்கு இதில் உதவுகின்றது.

**உள்நுழைதல் தொடக்கம் வெளியேறும் வரையான நடைமுறைகள்**

உள்நுழைதல்
எமது நோயாளர்கள் பெற்றோரின் விருப்பத்திற்கிணங்க அல்லது குடும்ப வைத்தியரின் வேண்டுகோளுக்கு அமைவாக பெற்றோர் அல்லது உறவினரால் அழைத்து வரப்பட்டு, அல்லது அவசரசேவையால் கொண்டு வரப்பட்டு உள் நுழைகின்றனர்.

பொறுப்பேற்றல் மற்றும் சிகிச்சைப் பிரிவைத் தீர்மானித்தல்
அனுபவம்மிக்க மற்றும் கற்பிக்கப்பட்ட பராமரிப்பு ஊழியர்கள் நோயாளர்களையும் அவர்களுக்குத் துணையாக வருபவர்களையும் வரவேற்பார்கள்.
அவர்கள் சிகிச்சைப் பிரிவை தீர்மானிக்கும் திட்டத்திற்கு, ATS க்கு அமைவாக (Australasian Triage Scale) செயலாற்றுவதுடன் அவர்கள் நோய் ஏற்பட்ட அல்லது காயப்பட்ட குழந்தைகள், பிள்ளைகள் மற்றும் இளையோர்கள் குறித்து தீர்மானிப்பதற்கான ஆழ்ந்த அறிவைக் கொண்டிருப்பர். நோயாளர்கள், அவர்களின் நோய் மற்றும் காயங்களின் ஏற்ற இறக்கத்திற்கு அமைய அதற்காக உடனடியாகத் தேவைப்படும் சிகிச்சைப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

காத்திருக்கும் நேரம்
அவசர வேளைகள் எதிர்பாராமல் வருபவை, அவைகள் குறித்து முன்னராகவே திட்டமிட முடியாது, எனவே நேரம் தாமதமாவது தவிர்க்க முடியாதது, சிகிச்சை வழங்குவதற்கான வரிசைக்கிரமம் நோய்/காயம் போன்றவைகளின் அளவுகளை வைத்தே தீர்மானிக்கப்படும்.

எமது நோயாளர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் காத்திருக்கும் பகுதியில் விளையாட்டுப் பொருட்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவை பாவனைக்கு வைக்கப்பட்டுள்ளது.
நோயாளியின் நிலமையில் மாற்றம் ஏற்பட்டாலோ, மோசமடைந்தாலோ அல்லது சந்தேகமான நிலை ஏற்பட்டாலோ எந்த நேரத்திலும் மீண்டும் நீங்கள் வரவேற்புப் பகுதியில் அது குறித்து அறிவித்துக் கொள்ளலாம்.

சிகிச்சை
பிள்ளைகள்/இளையோர் முதலில் அவசர சேவை நிடுநிலையக் குழுவினரால் சிகிச்சையளிக்கப்படுவார்கள். அவர்கள் உங்களுடன் ஒன்று சேர்ந்து தேவைப்படும் விபரங்கள் மற்றும் சிகிச்சை குறித்து முடிவு செய்வார்கள்.

வெளியேறுதல்
பிள்ளைகள்/இளையோர் அவர்களின் நிலமையைப் பொறுத்து ஆகக் கூடியது 24 மணித்தியாலங்கள் அவசர சேவைப் பிரிவின் கண்காணிப்புப் பகுதியில் வைத்துக் கண்காணிக்கப்பட்ட பின்பு வீடு செல்ல அனுமதிக்கப்படுவார்கள் அல்லது Inselspital ன் பிள்ளைகளுக்கான சிகிச்சைப் பிரிவிற்கு (உள்நோய் அல்லது முறிவு நெறிவுப் பகுதிக்கு) மாற்றப்படுவார்கள்.

**********************************************************************************************************

**வருகை தருவது**
பிள்ளைகள் மற்றும் இளையோருக்கான அவசர சேவை நடுநிலையத்தினுள் நுழையும் வாசல் 31 C ல் உள்ளது (கட்டிட விளக்கப் படத்தை பார்க்க)

**..... சிற்றூர்தியில் வருவது**
வேகவீதி A1 வெளியேறும்வழி Forsthaus, அதன்பின் வழிகாட்டி „Inselspital“ ஐ பின் தொடரவும். பிள்ளைகள் மற்றும் இளையோருக்கான அவசர சேவை நடுநிலையத்திற்கு உள் நுழையும் வழி இடது பக்கத்தில் உள்ளது (பார்க்க வழிகாட்டிப் பலகையை) அவசர சேவை நடுநிலையத்திற்கு முன்பாக நபர்களை ஏற்றுவதற்கோ அல்லது இறக்குவதற்கோ வசதியுண்டு, அதன்பின் தயவுசெய்து வாகனத்தை வேறு இடத்தில் நிறுத்தவும். அண்மித்த வாகனத் தரிப்பிடமானகாணிக்குள் சிறிது நேரம் வாகனத்தை நிறுத்துவதற்கு குறைந்தளவு இடங்களே உள்ளன. Insel-Parking ல் வாகனத்தை நிறுத்துவதற்கு தாராளமாக வசதியுண்டு (விளக்கப்படத்தில் P என அடையாளமிடப்பட்டுள்ளது)

**..... பொதுப் போக்குவரத்துச் சாதனங்கள்**
பேரூந்து இல. 11 (செல்லும் திசை Güterbahnhof) தொடரூந்து நிலையத்திலிருந்து அல்லது Hirschengraben ல் இருந்து Inselspital வரை.
Postauto 101 பேரூந்து நிலையத்திலிருந்து அல்லது Schanzenstrasse ல் இருந்து Inselspital வரை.
தொடரூந்தில் பயணம் செய்பவர்கள்: தொடரூந்து மேடையில் இருந்து மேற்குப்பக்க („Welle“) திசையில் ஓடும் படிகள் மூலமாகவோ அல்லது Lift மூலமாகவோ வெளியேறி வரவும்.
Postauto 101 „Welle“ ற்கு சிறிது கீழ்ப்பக்கமாக Schanzenstrasse ல் தரித்து நிற்கும். வலது பக்க மூலையால் திரும்பினால பேரூந்து இல. 11 Laupenstrasse வில் தரித்து நிற்கும் (பேரூந்துத் தரிப்பிடம் Hirschenberggraben).

**********************************************************************************************************

**அவசரசேவை நடுநிலையத்தில் பிள்ளைகள் மற்றும் இளையோர்களின் பராமரிப்பு**
எமது பராமரிப்புக் குழு, ஏறத்தாழ 40 பணியாளர்களைக் கொண்டுள்ளது. பராமரிக்கும் அனைத்து ஊழியர்களும் பல்லாண்டு தொழில் அனுபவத்தைக் கொண்டுள்ளனர். சிலருக்கு ஏற்கனவே தசாப்த காலமாக அவசர சேவையில் அனுபவம் உள்ளதோடு, அதனூடாக வேறு விடயங்களுடன் புதிய ஊழியர்களை அவசரசேவையின் விசேட பிரிவிற்கு நம்பிக்கையுடன் வழிநடத்தும் தகுதியையும் கொண்டுள்ளனர். எமது பராமரிப்பிற்கு இரு நிபுணத்துவம் வாய்ந்த சுகாதார அலுவலகர்கள் (FAGE) தகுந்த முறையில் உதவி புரிகின்றனர்.
புதிய ஊழியர்ககளுக்கு வெகு கவனமாகத் திட்டமிட்டு வழங்கப்பட்ட பயிற்சிக் காலத்தின் பின்பு, 1 முதல் 2 வருடங்களுக்கு பல வித்தியாசமான பகுதிகளில் தமது தொழில் அனுபவத்தை ஆழமாக விருத்தி செய்து கொள்வதற்கான தொழிற்கல்வி வசதி உள்ளது: வைத்திய நிலையத்தின் உள்ளகக் கற்கைநெறி „Intermediate Care Kinder“ (8 மாதங்களுக்கு இடம்பெறுவது),

அவசரசேவைப் பராமரிப்பு டிப்ளோமாக்குப் பின்பான இரண்டு வருடக் கற்கைநெறி, NDS பராமரிப்பு ஆலோசனை அல்லது விருப்பமான தெரிவில் வேறு மேற்கற்கை நெறிகள். ஒவ்வொருவம் தமது நிபுணத்துவ அறிவின்படி நோயாளர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் மிகத் திறமையான பராமரிப்பை வழங்குவார்கள்.

**தீர்மானிக்கும்-ATS படிநிலை** (Australasian Triage Scale)
அவசரசேவைக்கு வரும் நோயாளர்களுக்கு, அவர்களது நோய்கள் மற்றும் அவசர தேவைகளைக் கருத்திற்கொண்டு உரிய நேரத்தில் தகுந்த சிகிச்சை வழங்கப்படுவதற்காகத் „தீர்மானிக்கும் முடிவு“ எடுக்கப்படுகின்றது. எமது விசேடமாகப் பயிற்றுவிக்கப்பட்ட மற்றும் அனுபவம் வாய்ந்த பராமரிப்பு ஊழியர்கள் தமது ஆழமான அறிவின்படி சிறு குழுந்தைகள், பிள்ளைகள், இளையோர்கள் குறித்து தீர்மானம் எடுப்பார்கள். ஒவ்வொரு நோயாளியும் உள்ளே வரும்போது இவ்வாறான தீர்மானிக்கும் ATS படிநிலைப்படி (Australasian Triage Scale) முடிவு செய்யப்படுவார்கள். நோயின் அல்லது காயத்தின் கடுமையைக் கவனத்திற்கொண்டு ஆலோசனைக்கான அவசரதேவை குறித்து முடிவு செய்யப்படும்.

